சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன் – அரசு சிறப்புப் பள்ளிகள் – அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற சிறப்புப் பள்ளிகளில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்கள் பள்ளிப் படிப்பினை இடையில் நிறுத்தாமல் தொடர்ந்து படித்திட, ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் – 2016–2017ஆம் ஆண்டிற்கு திட்டத் தொடராணை மற்றும் ரூ.21,56,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை

அரசாணை (1D) எண்: 80

நாள்: 15.11.2016
துன்முகி – ஐப்பசி, 30
திருவள்ளுவர் ஆண்டு, 2047

படிக்க:

1. அரசாணை (1டி) எண்.05, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 22.01.2016.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடித எண் 2957/சிபதி/2016, நாள் 19.07.2016.

-----

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் கீழ் இயங்கும் அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற சிறப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 11 ஆம் வகுப்பு பயிலும் 916 மாணவர்களுக்கு ரூ.1500/– வீதமும், 12 ஆம் வகுப்பு பயிலும் 357 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.2,000/– வீதமும் ஆக மொத்தம் 1273 மாணவ, மாணவியர்களுக்கு, உயர்கல்வி தடைபடாமல் கல்வி தொடர ஏதுவாக ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தினை, 2015–2016ஆம் நிதியாண்டில் தொடர, திட்டத் தொடராணையும், இத்திட்டத்திற்கு வைப்பீட்டுத் தொகையாக ரூ.20,88,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற சிறப்புப் பள்ளிகளில் 10, 11 ஆம் வகுப்பு பயிலும் 884 மாணவர்களுக்கு ரூ.1500/– வீதமும், 12 ஆம் வகுப்பு பயிலும் 415 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.2,000/– வீதமும் ஆக மொத்தம் 1299 மாணவ, மாணவியர்களுக்கு, உயர்கல்வி தடைபடாமல் கல்வி தொடர ஏதுவாக ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தினை, 2016–17ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்திட திட்டத் தொடராணையும், ரூ.21,56,000/– ஊக்கத் தொகையாக தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பீடு செய்யும் வகையில், நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வழங்குமாறும் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

[த.பி.பா.]

3. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை அரசு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் கீழ் இயங்கும் அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற சிறப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 11 ஆம் வகுப்பு பயிலும் 884 மாணவர்களுக்கு ரூ.1500/– வீதமும், 12 ஆம் வகுப்பு பயிலும் 415 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.2,000/– வீதமும் ஆக மொத்தம் 1299 மாணவ, மாணவியர்களுக்கு, உயர்கல்வி தடைபடாமல் அவர்களின் கல்வியைத் தொடர ஏதுவாக ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தினை, 2016–2017 ஆம் நிதியாண்டிலும் தொடர, திட்டத் தொடராணையும், இத்திட்டத்திற்கு இந்நிதியாண்டில் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.20,00,000/–க்கும் மேலாக, தேவைப்படும் கூடுதல் செலவினம் ரூ.1,56,000/– சேர்த்து, மொத்தம் ரூ.21,56,000/– (ரூபாய் இருபத்தோரு இலட்சத்து ஐம்பத்தாறாயிரம் மட்டும்) ஊக்கத் தொகையாக தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பீடு செய்யும் வகையில், நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:-

| | |
|---|---|
| 2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 – சமூக நலன் – 101 – மாற்றுத்திறனாளிகள் நலன் – I – திட்டத்தில் சேராதது – AA – பார்வையற்றோர் பள்ளி – 09 – உதவித் தொகை – 09 ஏனையவை.<br>(து.தொ.கு.2235–02–101–AA– 0990) | ரூ.6,86,000/– |
| 2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 – சமூக நலன் – 101 – மாற்றுத்திறனாளிகள் நலன் – I – திட்டத்தில் சேராதது – AR – காதுகேளாதோர் பள்ளிகள் – 09 – உதவித் தொகை – 09–ஏனையவை.<br>(து.தொ.கு.2235–02–101–AR– 0996) | ரூ.12,89,000/– |
| 2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 – சமூக நலன் – 101 – மாற்றுத்திறனாளிகள் நலன் – I – திட்டத்தில் சேராதது – BE – கை கால் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான பள்ளி – 09 – உதவித் தொகை – 09 ஏனையவை.<br>(து.தொ.கு.2235–02–101–BE – 0991) | ரூ.1,81,000/– |
| **மொத்தம்** | **ரூ.21,56,000/–** |

5. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.1,56,000/– 2016–2017ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு ஒதுக்கீடு செய்வதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளித்து ஆணையிடப்படுகிறது. 2016–2017ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதித் துறைக்கு அனுப்பிடும் பொழுது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்பிடுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

[த.பி.பா.]

6. இவ்வாணை, நிதித் துறையின் அலுவல்சாரா எண் 58146/நிதி(சந)/2016, நாள் 07.11.2016–இல் பெறப்பட்ட இசைவின்படியும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 1111 (ஆயிரத்து நூற்று பதினொன்று) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்,சென்னை–78.
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / பெயரில்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.

நகல்:

மாண்புமிகு அமைச்சர் (நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர்
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
நிதித் [ச.ந. /வ.செ.பொ.II] துறை, சென்னை–9.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 15/11/16
15.11.16